www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

செம்மலருக்குப் பதில் :

# ''சோஷலிச எதார்த்தவாதம்'' - மறுபரிசீலனை தேவைதான்

## தொ. மு. சி. ரகுநாதன்

கோமல் சுவாமிநாதனின் 'சுபமங்களா' பத்திரிகையில் 91 ஆகஸ்டு மாத இதழில் வெளி வந்த எனது பேட்டியில், ''சோஷலிச எதார்த்த வாதம்'' என்ற பதச் சேர்க்கையும் அதன் அர்த்தபாவமும் இன்று மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும்'' என்று கூறி சோஷலிச எதார்த்தவாதம் பற்றிய எனது இப்போதைய சிந்தனையையும் சுருக்கமாகத் தெரிவித்திருந் தேன். இதனைக் கண்டிக்கும் விதத்தில், ''சோஷலிச எதார்த்த வாதம் காலாவதியாகிவிட்ட தா?'' என்ற தலைப்பில், சங்கர லிங்கம் என்பவர் 'செம்மலர்' பத்திரிகையின் செப்டம்பர் இத ழில் கட்டுரைஎழுதியிருக்கிறார். 'செம்மலர்' தமிழ்நாடு முற் போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைவரான திரு. கே. முத்தை யாவை ஆசிரியராகக் கொண்ட பத்திரிகை. எனவே 'செம் மலரில் வெளிவந்துள்ள கட்டுரை யின் கருத்துகளை. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கருத் தாகவே கொண்டு, அதற்கு நான் பதில் அளிக்க விரும்பு கிறேன்.

எனது பேட்டியில் நான் சோஷலிச எதார்த்தவாதம் காலாவதியாகி விட்டதாக எங் கும் கூறவில்லை. மாறாக, ஸ்டாலின் காலத்திலும், அவரது அரவணைப்போடு, கட்சியின் சார்பில் இலக்கியத்துறையில் சட்டாம்பிள்ளையாக இருந்து வந்த ஜாடனோவின் காலத் திலும் சோஷலிச எதார்த்த வாதம் என்பது எவ்வாறு கொச்சைப்படுத்தப்பட்டது என் பதைச் சுருக்கமாகக் கூறி, 'இவ் வாறு கொச்சைப்படுத்தப்பட்ட சோஷலிச எதார்த்தவாதம் நமக்குத் தேவையில்லை'' என்றே கூறிவிட்டு, இதனைத் தொடர்ந்து ''1934ல் நடந்த சோவியத் எழுத்தாளர் மாநாட் டில் சோஷலிச எதார்த்தவா தத்துக்கு கார்க்கி கொடுத்த விளக்கம், ஸ்டாலின் கூறிய



படிப்பகம்

www.padippakam.com

விளக்கத்திலிருந்து மாறுபட்ட தாகவே இருந்தது. கார்க்கியும் ஸ்டாலின் புகழ்பாடிக் கட்டுரை கள் எழுதியுள்ள போதிலும்' இலக்கியத்தில் கட்சியுணர்வும் கட்சி விசுவாசமும் இருக்க வேண்டும் என்று அவர் கூற வில்லை. எனவே கார்க்கியின் விளக்கங்கள் பலவும் நாம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே உள்ளன" என்றும் கூறியிருந் தேன். ஆனால் 'செம்மலர்' கட்டுரை நான் இவ்வாறு வேறு பாடு கண்டு கூறியுள்ள கூற்றை வேண்டுமென்றே மறைத்து விட் டது. மேலும், சோஷலிச எதார்த்தவாத நோக்கில் படைக்கப்பட்டதாகக் கூறப் படும் "கார்க்கியின் 'தாயை'ப் பின்பற்றி, ஆஸ்திரோவ்ஸ்கியின் 'வீரம் விளைந்தது', அலெக்சி டால்ஸ்டாயின் 'அக்கினிப் பரீட்சை', ஷோலகோவின் 'டான் நதி அமைதியாக ஓடு கிறது' போன்ற சிறந்த நாவல் கள் வெளிவரத்தான் செய்தன" என்றும் அந்த பேட்டியில் கூறி யிருந்தேன். 'செம்மலர்' கட் டுரை இதனையும் மூடிமறைத்து தொ.மு.சி. சோஷலிச எதார்த்த வாதச் சிந்தனையின் அடிப்படை யில் உருவான மாபெரும் முயற்சிகள் எல்லாம் வீண் என் கிறாரோ?" என்று எனது பேட்டி சம்பந்தமாகக் கேள்வி எழுப்பியுள்ளது.

எனது பேட்டியில் முக்கிய மான விஷயம் ஆரம்பத்தில் கூறியபடி, சோஷலிச எதார்த்த வாதம் என்ற பதச் சேர்க்கை யையும் அதன் அர்த்த பாவத் தையும் இன்று மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்பதுதான். ஆனால் "செம்மலர்" கட் டுரையோ இந்த இரு விஷயங் களிலும் மறு பரிசீலனைக்கே இடமில்லை என்பதையே வலி யுறுத்திக் கூறுகிறது. அந்தக் கட்டுரையின் முக்கியமான கருத் தும் அதுதான்.

ஆனால் இடதுசாரி இயக்கத் தில் மறுபரிசீலனை, மறு சிந் தனை என்பது ஒன்றும் புதிய தல்ல இவற்றைத்தான் நாம் விமர்சனம்-சுயவிமர்சனம் என்று கூறுகிறோம். இத்தகைய விமர் சனத்தை நாம் பல முறை செய் தும் இருக்கிறோம். அதிலும் சோஷலிச உலகம் எனக் கூறப் பட்டு வந்த சோவியத் யூனியனி லும், கிழக்கு ஐரோப்பிய நாடு களிலும் கடந்த சில ஆண்டு களில் ஏற்பட்டுள்ள மாற்றங் களுக்கான மூல காரணங்களை இந்தச் சில ஆண்டுகளின் நிகழ்ச்சிகளில் மட்டும் காண முற்படாது, அதற்கும் முந்திய அறுபதாண்டுகால வரலாற்றை யும் கருத்தில் கொண்டே காண முற்பட வேண்டும் என்பதே எனது கருத்தாகும். இதனைச் செய்யாமல் விடுவதுதான் தவ



படிப்பகம்

www.padippakam.com

றாகும். என்னைப் பொறுத்த வரையில், ஓர் இலக்கியவாதி என்ற முறையில், கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் சோவியத் நாட்டில் 'கிளாஸ்னாஸ்த்' என்ற மனம் திறந்து பேசும் போக்கு இடம் பெற்று வந்ததன் விளைவாக நமக்குத் தெரியவந்துள்ள (இதுவரை மூடி மறைக்கப்பட்டிருந்த, அல்லது திரித்துக் கூறப்பட்டுவந்த) உண்மைகளின் ஒளியில், சோஷலிச எதார்த்த வாதம் என்ற பதச்சேர்க்கை பற்றியும், அதன் அர்த்தபாவம் பற்றியும் நாம் மறு பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என்றே கருதுகிறேன்; இவ்வாறு கருதும் போது நான் பலவற்றையும் சிந்தித்துப் பார்க்கிறேன்

'சோஷலிச எதார்த்த வாதம் என்ற இந்தப் பதச் சேர்க்கை எப்போது எந்தச் சூழ்நிலையில் எப்படித் தோன்றியது என்பது பற்றிய உண்மையான உண்மை இப்போதுதான் தெரிய வந்துள்ளது. சோஷலிச எதார்த்த வாதத்தின் தந்தை மார்க்சிம் கார்க்கிதான் என்றும், 1907 ல் வெளி வந்த அவரது 'தாய்' நாவலே (இதனைத் தமிழில் மொழி பெயர்த்ததும் நான்தான்) முதல் சோஷலிச எதார்த்த வாத நாவல் என்றும் கூறப்பட்டு வந்திருக்கிறது. எனவே கார்க்கிதான் இந்தப் பதச்சேர்க்கையை உருவாக்கியவர் என்றும் நாம் பொதுவாகக் கருதி வந்திருக்கிறோம் (இந்தப் பதச்சேர்க்கை கார்க்கியும் ஸ்டாலினும் சேர்ந்து உருவாக்கியதாகும் என்றும் சில விமர்சகர்கள் கருதி வந்திருக்கிறார்கள்). ஆனால் இந்த நாவலை எழுதி வெளியிட்ட காலத்தில் இது சோஷலிச எதார்த்த வாத நோக்கில் எழுதப்பட்ட நாவல் என்று கார்க்கியும் கூறவில்லை. இந்த நாவலின் குறை நிறைகளைக் குறித்து கார்க்கியிடம் நேரில் விவாதித்த லெனினும் இதனை சோஷலிச எதார்த்தவாத நோக்கில் எழுதப்பட்ட நாவல் எனக் கூறவில்லை. இதன் பின்னர் மாத்வி கோஜிமியாகினின் வாழ்க்கை (1911, ஆர்த்தமனோவ் குடும்பம் (1925) ஆகிய நாவல்களையும் [இவற்றை நான் முறையே பிரம்மச்சாரியின் டயரி, மூன்று தலை முறைகள் என்ற தலைப்புக்களில் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறேன்] கிளிம் சாம்கினின் வாழ்க்கை [1927-30] என்ற நாவலையும் [இதன் முழுமையான மொழி பெயர்ப்பு இன்னும் ஆங்கிலத்தில் கிட்டவில்லை] கார்க்கி எழுதியிருக்கிறார். இவற்றையும் அவர் சோஷலிச எதார்த்த நோக்கில் எழுதப்பட்ட நாவல்கள் எனக் குறிப்பிடவில்லை;



படிப்பகம்

www.padippakam.com

இவை வெளிவந்த காலத்தில் இலக்கிய விமர்சகர்கள் எவரும் இவற்றை அவ்வாறு குறிப்பிடவில்லை. ஏனெனில் சோஷலிச எதார்த்த வாதம்' என்ற பதச் சேர்க்கையே 'தாய்' நாவல் வெளிவந்து கால் நூற்றாண்டுக் காலத்துக்குப் பின்னரே ''உருவாக்கப்பட்டது'. இதன்பின்னரே 1907ல் 'தாயை' எழுதிய கார்க்கிக்கு சோஷலிச எதார்த்த வாதத்தின் தந்தை என்ற மகுடம் சூட்டப்பட்டது. உரிமைகளுக்காகப் போராடும் தொழிலாளிகளையும்அவர்களில் ஒருவனின் தாயையும் கதாபாத்திரங்களாகக் கொண்டு, அவர்

**பிரிவினைச் சக்திகளே நாட்டின் முதல் எதிரி. நாட்டு ஒற்றுமை என்றால் நாட்டைப் பிரிக்கின்ற, அழிக்கின்ற பிரிவினை சக்திகளுக்கு எதிரான அனைத்துத் தேசபக்த ஆரோக்கியமான சக்திகளின் ஒற்றுமை என்று பொருள்.**

கள் குரலை எதிரொலிக்கும்' அதன் மூலம் சோஷலிசக் கருத்துக்களை வலியுறுத்தும் ஒரு புதுமையை 1907 ல் கார்க்கி புரிந்தார் என்பதுஉண்மைதான்.

ஆயினும் சோஷலிச எதார்த்த வாதம் என்ற பதச்சேர்க்கை சோவியத் நாட்டில் அமலுக்குக் கொண்டுவரப்பட்ட காலத்தில், அதற்கு ஒரு நீண்டகால மரபு இருந்து வந்துள்ளதாகவும், அந்த மரபை ஒரு மாபெரும் சோவியத் எழுத்தாளர் தொடங்கிவைத்ததாகவும் நிலை நாட்ட வேண்டிய அவசியம் இருந்தது. எனவேதான் சோஷலிச எதார்த்தவாதம் கார்க்கியின் 'தாய்' நாவலுடனேயே தொடங்கிவிட்டது என்று கூறப்பட்டது. ஆனால் 'தாய்க்குப் பின்னால் கார்க்கி எழுதிய 'ஆர்த்தமனோவ் குடும்பம்' என்ற நாவலை, ஸ்டாலின் சோஷலிச எதார்த்த நாவல் என்று ஏற்றுக் கொண்டாரா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஏனெனில் ஸ்டாலினோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவரும், கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினராக இருந்தவரும், பல நாடகங்களையும், நாவல்களையும், கவிதைகளையும் எழுதியவரும், நோவிமிர், லிட்ராரி கெஜட் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்தவரும், இலக்கியத்துக்கான ஸ்டாலின் பரிசுகளைப் பலமுறை பெற்றவருமான பிரபல சோவியத் எழுத்தாளர் கான்ஸ்தாந்தின் சிமனோவ், தாம் காலமாவதற்கு ஈராண்டுக்கு முன்னால் 1977ல் எழுதிவிட்டுச்சென்ற கடைசி நூலான 'எனது தலைமுறையினரின்



படிப்பகம்

www.padippakam.com

பார்வையில்' என்ற ஸ்டாலின் பற்றிய நினைவுக் குறிப்புக்களில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார். ''ஆர்த்தமனோவ் குடும்பம் என்ற நாவலில் கார்க்கி யார் பக்கம் நிற்கிறார்? உங்களுக்கு அது தெளிவாகப் புரிகிறதா?'' என்று ஸ்டாலின், கான்ஸ்தாந்தின் பதயேவிடம் (இவரும் பிரபல சோவியத் எழுத்தாளர்தான்) கேட்டதாகவும், அதற்கு பதயேவ் தமக்குப் புரிகிறது என்று பதிலளித்ததாகவும், ஆனால் ஸ்டாலின் தமக்குப் புரியவில்லை என்று உதட்டைப் பிதுக்கியதாகவும் சிமனோவ் எழுதுகிறார் (சிமனோவின் இந்தக் கடைசி நூலும் இப்போதுதான் வெளிச்சத்துக்கு வந்துள்ளது).

சரி, சோஷலிச எதார்த்த வாதம் என்ற பதச்சேர்க்கை 1932ல் எப்படி உருவாயிற்று?

1917 புரட்சிக்குப் பின்னர் சோவியத் நாட்டில் பல்வேறு இலக்கியப் போக்குகள் நிலவின, அவற்றை இங்கு விரித்துக் கூற வேண்டியதில்லை. இருபதாம் ஆண்டுகளில் அங்கு ரஷ்யப் பாட்டாளி வர்க்க எழுத்தாளர் சங்கம் (ராப்) என்ற ஒரு ஸ்தாபனம் இருந்தது. இது இலக்கியத் துறையில் ஒரு வக்கிரமான செக்டேரியன் நிலையை மேற்கொண்டு, எழுத்தாளர்களைத் தட்டிக் கேட்கும் சட்டாம் பிள்ளையாகச் செயல்பட்டு வந்தது. இதன் செயல்பாட்டுக்கு இரண்டு உதாரணங்கள்: புரட்சிக் கவிஞரான மயாகோவ்ஸ்கி 'பாத்-ஹவுஸ்' (குளியலறை) என்ற ஒரு நாடகத்தை எழுதி அரங்கேற்றினார்; இது ஸ்டாலின் காலத்திய கட்சி அதிகார வர்க்கத்தின் ஜனநாயக விரோதப் போக்குக்குச் சாட்டையடி கொடுப்பதாக இருந்தது. இதனால் ராப் ஸ்தாபனம் மயாகோவஸ்கியின் மீது கடுமையான கண்டனக்கணைகளைத் தொடுத்தது. இந்தக் கணைகளின் தாக்குதலைத் தாங்க மாட்டாமல், மயாகோவ்ஸ்கி 1930ல் தற்கொலையே புரிந்து கொண்டார்! இந்த ஸ்தாபனம் ஷோலகோவைக்கூட விட்டு வைக்கவில்லை. அவரது 'டான் நதி அமைதியாக ஓடுகிறது' என்ற நாவலின் கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்த்த இந்த ஸ்தாபனம், அதில் ஷோலகோவ் செஞ்சேனை வீரர்களை இழிவுபடுத்தி விட்டார். எனவே அதனை வெளியிடக் கூடாது என்று கூறியது. இதன் பேரில் ஷோலகோவ் இது விஷயமாக கார்க்கிக்கு விளக்கமாகக் கடிதம் எழுதிய பின்னர், கார்க்கின் தலையீட்டின் பேரில்தான் அந்த நாவல் வெளிவந்தது. (இவற்



படிப்பகம்

www.padippakam.com

ற்றையெல்லாம் விளக்கிக்கூற இங்கு இடமில்லை). இவையெல்லாம் 'கிளாஸ்னாஸ்த்' தொடங்குவதற்கு முன்பே தெரியவந்த விஷயங்கள் தாம். ஆயினும் இந்த ராப் ஸ்தாபனமே ஒரு கட்டத்தில் சோவியத் அதிகார வர்க்கத்தைக் குறை கூற முற்பட்டவுடன், இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டிய அவசியம் சோவியத் ஆட்சிக்கு—ஸ்டாலினுக்கு—ஏற்பட்டது. இந்தத் தருணத்தில்தான் — அதாவது இருபதாம் ஆண்டுகளின் இறுதியிலும் முப்பதாம் ஆண்டுகளின் தொடக்கத்திலும்தான்—சோவியத் இலக்கியத்துக்கான கோட்பாட்டுக்கு என்ன பெயர் வைப்பது என்ற சர்ச்சை எழுந்தது. ''பாட்டாளி வர்க்க எதார்த்த வாதம்'' எனப் பெயர் வைக்கலாம் என்றனர் சிலர்; வேறொருவர் ''புரட்சிகர சோஷலிச எதார்ந்தவாதம்'' எனப் பெயர் வைக்கலாம் என்றார். இவ்வாறு பெயர் வைக்கும் விஷயத்தில் மயாகோவ்ஸ்கி, அ. ஸ்.க்சி டால்ஸ்டாய், அ ன தோலி லுனாச்சார்ஸ்கி போன்ற பிரபல எழுத்தாளர்களும் தத்தம் கருத்துக்களைக் கூறினர்; இவர்கள் தெரிவித்த பெயர்களில் 'புரட்சி', 'சோஷலிசம்' என்பன எதுவும் இடம் பெறவில்லை. என்றாலும், இவான் கிரான்ஸ்கி என்ற பிரபலமடையாத எழுத்தாளர் ஒருவரும், லிட்டரரி கெஜட் பத்திரிகையின் 1932 மே மாதத் தலையங்கமும் ''சோஷலிச எதார்த்தவாதம்'' என்ற பெயரை வைக்கலாம் என்றனர். கார்க்கிக்கு இந்தப் பெயர் வைக்கும் பணியில் எந்தப் பங்கும் இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் அவர் அப்போதுதான் இத்தாலியிலிருந்து தாயகம் திரும்பியிருந்தார். இதன் பின் ராப்ஸ்தாபனத்தையும் பிற இலக்கிய ஸ்தாபனங்களையும் கலைத்து விட்டு, சோவியத் எழுத்தாளர்கள் அனைவரையும் அகில யூனியன் சோவியத் எழுத்தாளர் சங்கம் என்ற ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வரும் நோக்கத்தோடு, 1932 அக்டோபர் இறுதியில் கார்க்கி வீட்டில் ஓர் எழுத்தாளர் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்துக்கு ஸ்டாலினும் வந்திருந்தார். அவர் 'சோஷலிச எதார்த்த வாதம்' என்ற பெயரே பொருத்தமானது, அதையே வைத்துக் கொள்ளலாம் என்று கூறினார். கார்க்கி உள்ளிட்ட எழுத்தாளர்கள் அனைவரும் அதனையே வேத வாக்காகக் கொண்டு, அதனை அங்கீகரித்து விட்டனர். மேலும் அதே கூட்டத்தில் சோவியத் எழுத்தாளர் சங்கமும் அமைக்கப்பட்டு விட்டது. இது தான் 'சோஷலிச எதார்த்த



படிப்பகம்

www.padippakam.com

வாதம்' என்ற பதச்சேர்க்கை உருவான கதை.

எனது பேட்டியில் கூறியதைத் திரும்பவும் கூறுகிறேன்: ''சோஷலிசம்'' என்பது அரசியல் அமைப்புப் பற்றிய ஒரு சொல்; 'எதார்த்தவாதம்' என்பது அழகியல் சம்பந்தப்பட்ட சொல். இவை இரண்டையும் இணைத்த காரணத்தால்தான் 'சோஷலிச எதார்த்தவாதம்' என்ற பதச்சேர்க்கை அர்த்தமற்றதாகவும் பொருத்தமற்றதாகவும் இருக்கிறது. இதனால் தான் சோஷலிச எதார்த்த வாதம் என்று சொன்னால், முதலாளித்துவ எதார்த்தவாதம், ஏகாதிபத்திய எதார்த்தவாதம் என்றெல்லாம் உண்டா என்ற கேள்வியைக் கேட்க நேர்கிறது. உண்மையில் இன்று சோவியத் நாட்டில் எழுத்தாளர்களையும் பத்திரிகையாளர்களையும் நோக்கி, சோவியத் நாட்டு வாசகப் பெருமக்களே இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளனர். எனவே தான் நானும் அக்கேள்வியை எழுப்புகிறேன். இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் எந்த நாட்டு மக்களானாலும், மக்கள் ஒன்றும் மடையர்கள் அல்ல. சொல்லப்போனால் மக்களிடமிருந்துதான் நாம் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. கோட்பாடுகளை விளக்கும் புத்தகங்களிலிருந்து மட்டும் அல்ல.

சரி. அப்படியானால் எதார்த்தவாதம் என்ற அழகியல் சார்ந்த சொல்லோடு, சோஷலிசம் என்ற அரசியல் சார்ந்த சொல்லைச் சேர்த்த இந்தப் பதச்சேர்க்கையை ஸ்டாலின் ஏற்றுக் கொண்டு, இதனைப் பிரகடனப் படுத்தியது ஏன்? அதில் அவருக்கு அரசியல் நோக்கமும் இருந்தது என்பதையே பின்னர் நிகழ்ந்தவை யாவும் உறுதிப் படுத்துகின்றன.

சோஷலிச எதார்த்தவாதமே சோவியத் எழுத்தாளர்களின் கோட்பாடாகும் என்பது அங்கீகரிக்கப்பட்டு, 1932ல் சோவியத் எழுத்தாளர் சங்கம் தொடங்கப் பட்டவுடனேயே, அதன் விதிமுறைகளில் இந்தக் கோட்பாடும் இடம் பெற்றுவிட்டது. அது மட்டும் அல்ல. சோவியத் எழுத்தாளர்கள் சோவியத் அரசுக்கும் கட்சிக்கும் விசுவாசமாக இருக்க வேண்டும் என்ற ஷரத்தும் அவற்றில் இடம் பெற்று விட்டது; இவை பின்னர் 1934ல் நடந்த முதல் சோவியத் எழுத்தாளர் காங்கிரசிலும் (மாநாடு) அங்கீகரிக்கப்பட்டுவிட்டன. கட்சிக்கும் அரசுக்கும் எழுத்தாளர்கள் விசுவாசமாக இருக்க வேண்டும் என்ற ஷரத்து எவ்வாறு இடம் பெற்றது? ஏனெனில், எழுத்தாளர்கள் அவ்வாறுதான் இருக்கவேண்டும்



படிப்பகம்

www.padippakam.com

என்று லெனின் 1905ஆம் ஆண்டிலேயே கூறிவிட்டார் என்பதே ஸ்டாலின் அளித்த விளக்கமாக இருந்தது

1905 நவம்பர் 13 அன்று லெனின் ''கட்சி ஸ்தாபனமும் கட்சி இலக்கியமும்'' (பார்ட்டி ஆர்கானிசேஷன் அண்டு பார்ட்டி லிட்டரேச்சர்) என்ற சிறுகட்டுரையொன்றை 'புதிய வாழ்க்கை' என்ற தினசரிப் பத்திரிகையில் எழுதினார். 1905 அக்டோபரில் நடந்த பொது வேலை நிறுத்தம் அளித்த நிர்ப்பந்தத்தின் விளைவாக, ஜார் மன்னன் அந்த மாதத்தில் மக்களுக்கு சிவில் உரிமைகளை வழங்கினான். இதன் மூலம் கிட்டிய பத்திரிகைச் சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு போல்ஷிவிக் கட்சியினர் தமது பத்திரிக்கைகளைப் பகிரங்கமாக வெளிக் கொணர்ந்தனர். (ஆனால் இந்தப் பத்திரிகைச் சுதந்திரம் அதே வருடம் டிசம்பரில் தொடங்கிய ஆயுதம் தாங்கிய புரட்சிக்குப் பின் பறிக்கப்பட்டுவிட்டது). பத்திரிகைச் சுதந்திரம் கிட்டியிருந்த இந்த இடைக்காலத்தில், தமது கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவிக்க முனையும் கட்சி எழுத்தாளர்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் நின்று ஒருமித்த குரலில் அவற்றைத் தெரிவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே லெனின் இந்தக் கட்டுரையை எழுதினார். இந்தக் கட்டுரையில் அவர் ஓரிடத்தில், ''அமைதியாக இருங்கள், கனவான்களே! எல்லாவற்றுக்கும் முதன்மையாக, நாம் கட்சி இலக்கியத்தையும் அதனைக் கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதையும் பற்றித்தான் விவாதித்துக் கொண்டிருக்கிறோம்'' என்று இதனைத் தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அதே கட்டுரையில் இலக்கியம் பற்றிக் கூறும்போது, ''இலக்கியத்தை யாந்திரிகமாக்குவது அல்லது சரி மட்டமாக்குவது, பெரும்பான்மையோர் ஆட்சிக்குச் சிறுபான்மையோரை உள்ளாக்குவது என்ற பிரச்சினைக்கே இடமில்லை. அதேபோல் இந்தத் துறையில் தனி மனித முயற்சி, தனி மனித விருப்பம், சிந்தனை, கற்பனை, உருவம், உள்ளடக்கம் ஆகியவற்றுக்கு மிகவும் அதிகமான வாய்ப்பைச் சந்தேக மன்னியில் வழங்க வேண்டும் என்பதிலும் பிரச்சினைக்கு இடமில்லை. இவை யாவும் மறுக்க முடியாதவை. ஆனால் இவை யாவும் பாட்டாளிவர்க்கக் கட்சி இலக்கியப் பகுதியை அதன் பிற பகுதிகளுடன் யாந்திரிகமாக ஒன்றுபடுத்திப் பார்க்கக்



படிப்பகம்

www.padippakam.com

கூடாது என்பதையே புலப்படுத்துகின்றன" என்றும் அவர் எழுதியுள்ளார். அதாவது இதில் அவர் படைப்பிலக்கியக் கர்த்தாக்களுக்கு உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டையும் தேர்ந்தெடுப்பதில் அதிகமான சுதந்தரம் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்' அதே சமயம் கட்சி இலக்கியத்தையும் படைப்பிலக்கியத்தையும் அவர் தெள்ளத் தெளிவாக வேறு படுத்திக் கூறியுள்ளார், 'லிட்டரேச்சர்' என்ற சொல் எல்லா நூல்களுக்கும் பொருந்தும். ஆனால் லெனின் கட்சி இலக்கியங்கள் என்று சொல்லும் போது கட்சிப் பிரசுரங்கள், கட்சிப் பத்திரிகைகள், கட்சி சம்பந்தப்பட்ட நூல்கள் ஆகியவற்றையே குறிப்பிடுகிறார் என்பது தெளிவு.

ஆனால் 'லிட்டரேச்சர்' என்ற இந்தச் சொல்லின் பொதுமைத் தன்மையைப் பயன்படுத்திக் கொண்டு, லெனின் குறிப்பிட்டுள்ள ஒருமித்த கருத்து என்ற கட்சிக் கட்டுப்பாடு படைப்பிலக்கியத்துக்கும் பொருந்தும் என்று ஸ்டாலின் வியாக்கியானம் செய்து, படைப்பிலக்கியத்தையும் கட்சியின் பிரசாரக் கருவியாக ஆக்குவதற்கு வழிகோலினார். இதனைச் சாதிப்பதற்காகத் தான் அவர் இலக்கியக் கோட்பாடு பற்றிய பதப் பிரயோகத்தில் 'சோஷலிசம்' என்ற அரசியல் வார்த்தையைச் சேர்த்து, அதனை 'சோஷலிச எதார்த்தவாதம்' ஆக்கிவிட்டார் என்பதைப் புரிந்து கொள்வது ஒன்றும் சிரமம் அல்ல. ஏனெனில், எழுத்தாளர்கள் எழுதும் நூல்களை வெளியிடுவதற்கு முன் அவற்றைச் சரிபார்த்து, அவற்றைப் பிரசுரத்துக்கு அங்கீகரிப்பதற்கு அல்லது நிராகரிப்பதற்கு கட்சியைச் சேர்ந்த எழுத்தாளர்களைக் கொண்ட ஒரு தணிக்கைக் குழுவும்' எழுத்தாளர் சங்கத்தின் தனியாக நிறுவப்பட்டது. இந்தத் தணிக்கைக் குழு, எழுத்தாளர்கள் எழுதிய நூல்களை அப்படியே அங்கீகரித்து விடுவதில்லை. அது கூறுகிற விதத்தில் அவற்றைத் திருத்தி எழுதித் தருமாறு கூறுவதும் உண்டு. இவ்வாறு நூல்கள் நான்கு முறை, ஏன் பத்து முறைகளுக்கு மேல் திருத்தி எழுதிக் கொடுத்த எழுத்தாளர்கள் உண்டு; இவ்வாறு திருத்தி எழுதிக் கொடுந்து ஸ்டாலின் இலக்கியப் பரிசுகளைப் பெற்ற எழுத்தாளர்களும் உண்டு (இவர்களைப் பற்றிய விவரங்களைக் கூற இங்குஇடமில்லை). எனவே எதார்த்தத்தில் சோவியத் அரசுக்கும் கட்சிக்கும் துதி பாடுகின்ற, அவற்றில் குறைகளே காணாத நூல்களே அச்சேறு


படிப்பகம்

www.padippakam.com

வதற்கான வாய்ப்பைப் பெற்றன.

மேலும், சோஷலிச எதார்த்த வாதம்தான் சோவியத் எழுத்தாளர்களின் ஒரே கோட்பாடாகும்' என்று கூறப்பட்டு விட்டதால், அதுபற்றிக் கூறப்பட்டு வந்த ''இலக்கணத்துக்கு'' உட்படாத நூல்கள், மற்றும் இலக்கியத்தில் புதுமைகள், சோதனை முயற்சிகள் முதலியவற்றுக்கும் இடமே இல்லாமற் போய்விட்டது.

---

பழமை வாய்ந்த பெரிய நகரமான குவாங்ஜீவில் முக்கிய அமைச்சர்களின் இல்லங்களில் அளவற்ற செல்வம் குவிந்து கிடந்தது. சில இல்லங்களில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அடிமைகள் இருந்தனர்.

---

இதன் பின்னர் 1936 ல் சோவியத் நாட்டில் சோஷலிசம் நிலை நாட்டப்பட்டு விட்டதாகக் கூறிய ஸ்டாலினின் அரசியல்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னால், வேறொரு கருத்தும் கூறப்பட்டது. சோவியத் நாட்டில் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டு அங்கு ஒரு வர்க்க பேதமற்ற சோஷலிச சமுதாயம் அமைக்கப்பட்டு விட்டதால், அங்கு பகைமை வர்க்க அடிப்படையிலான முரண்பாடுகளுக்கே இடமில்லை, அதாவது அங்கு நல்லது கெட்டது என்ற முரண்பாடுகளுக்கே இடமில்லை, அவ்வாறு ஏதேனும் முரண்பாடு இருக்குமானால், அது நல்லதற்கும் அதைக் காட்டிலும் 'நல்லதற்குமான முரண்பாடே யாகும் என்று கூறப்பட்டது. இதன் மூலம் முரண்பாடுகளேயற்ற சமுதாயம் என்ற மார்க்சிய விரோதமான ஒரு கருத்தும்-ஒரு பிரமையும்-உருவாக்கப்பட்டது. முரண்பாடுகள் அற்ற இத்தகைய சமுதாயத்தையே எழுத்தாளர்கள் தமது நூல்களில் பிரதிபலிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. இதனால் எழுத்தாளர்கள் 'ஸ்டாலின் மாடல் சோஷலிச'த்தையே போற்றிப் பாராட்டி எழுத வேண்டியிருந்தது.

அடுத்து 1934ல் நடந்த சோவியத் எழுத்தாளர் காங்கிரசில் எழுத்தாளர்கள் தமது படைப்புக்களில் ஒரு 'பாசிட்டிவ் ஹீரோ'வையே கதாநாயகனாக கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. இதனைக் குறித்து 1937 ல் ஸ்பானிஷ் உள்நாட்டு போரின் போது கொல்லப்பட்ட ஆங்கிலேய எழுத்தாளர் ரால்ப் பாக்ஸ்கூடத் தமது ''நாவலும் மக்களும்'' என்ற ஆங்கில நூலில் எழுதியுள்ளார். ஓர் இலக்கியப் படைப்பில், வாசகர்களுக்கு முன்



படிப்பகம்

www.padippakam.com

மாதிரியாக, எடுத்துக்காட்டாக விளங்கும் ஓர் 'லட்சியக் கதா நாயகன்' இடம்பெற வேண்டும் என்று கூறுவதில் தவறில்லை ஆனால் இந்தப் 'பாசிட்டிவ் ஹீரோ'' என்றகருத்து எவ்வாறு இடம்பெறவேண்டும்என்றுஎதிர் பார்க்கப்பட்டது? பெரும்பாலும் இந்தப் 'பாசிட்டிவ் ஹீரோ' ஒரு கம்யூனிஸ்டுக் குட்டித் தலைவனாகவே இருப்பான்; அவன் குறைபாடுகளே இல்லாத சகல கல்யாண குணங்களும் நிரம்பியவனாக இருப்பான்; இவ்வாறு அவன் இருப்பதன் காரணமாக அவன் தவறே செய்ய மாட்டான்; அதாவது அவன் எதைச் செய்தாலும்,— சக தோழர் ஒருவரை அவன் கொலையே செய்தாலும்கூட, அது தவறாக இருக்காது; நியாயமானதாகவே இருக்கும். அவ்வாறு செய்யப்படும் கொலையும் கூட, ''பாட்டாளி வர்க்க மனிதாபிமான''த்தால் செய்த காரியமாகவே நியாயப்படுத்தப்படும். இவ்வாறு நியாயப்படுத்தவும் பட்டது [உதாரணத்துக்கு: அலெக்சாந்தர் பதயேவ் எழுதிய 'முறியடிப்பு' (''ரவுட்'') என்ற நாவல் ]

மேலும், இலக்கியத்தில் கட்சியும் கம்யூனிஸ்டுகளும் முதன்மைப்படுத்தப்பட்ட காரணத்தால், கட்சியும் கம்யூனிஸ்டுகளுமே நாட்டின் கண்கள். எனவே நாட்டு மக்களைக் காப்பதற்காகவும் அவர்களது நலன்களைக் காப்பதற்காகவும் கம்யூனிஸ்டுகள் தியாகங்கள் செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்பதற்கும் மேலாக, அவர்களைக் காப்பாற்றுவதற்காக, கட்சி நலன்களைக் காப்பதற்காக நாட்டு மக்கள் தியாகங்கள் செய்யவும் தயாராக இருக்க வேண்டும் என்ற மனோபாவமும் இலக்கியங்களில் வலியுறுத்தப் பட்டது.

இந்தப் போக்குகள் 1936ல் கார்க்கி மரணமடைந்த பின்னால் சோவியத் இலக்கியத்தில் படிப்படியாக இடம் பெற்று, யுத்தப் பிற்காலத்தில் 1946ல் வலுப்பெற்று ஸ்டாலின் மரணம் அடைந்த 1953 ஆம் ஆண்டு வரையிலும் நீடித்தன என்றே சொல்ல வேண்டும். மேலும் 1935ல் கட்சியின் மத்தியக் கமிட்டிச் செயலாளர்களில் ஒருவராகி, 1939ல் பொலிட்பீரா உறுப்பினராகவும் ஆகி, இலக்கியத் துறையில் சோஷலிச எதார்த்த வாதத்தை நிலைநாட்டி வரும் பொறுப்பை ஏற்று, இலக்கியம் சம்பந்தமாகச் சகலமும் அறிந்த 'சகலகலா வல்லவனாக'', கையில் சவுக்கு ஏந்திய சட்டாம் பிள்ளையாகச் செயல்பட்டுவந்த ஜாடனோவ் என்ற ஸ்டாலினின்



படிப்பகம்

www.padippakam.com

நெருங்கிய சகாவின் காலத்தில் இந்தப் போக்குகள் கொடி கட்டிப் பறந்தன. இதன் விளைவாக, சோஷலிச எதார்த்த வாதம் அங்கீகரிக்கப்பட்டபின் கழிந்த இருபது ஆண்டுக் காலத்தில், எத்தனையோ எழுத்தாளர்கள் எழுத்தாளர் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்; உழைப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்; சிறைகளில் அடைக்கப்பட்டனர்; சுவடு தெரியாமல் கொலையுண்டும் மடிந்தனர். (இந்த எழுத்தாளர்கள் பற்றிய விவரங்களைக் கூறவும் இங்கு இடமில்லை).

சொல்லப்போனால், சோவியத் நாட்டில் சோஷலிச எதார்த்த வாதத்துக்கு ஸ்டாலினிச பாணியில் கொடுக்கப்பட்டு வந்த விளக்கமும், அதனை நிலைநாட்டி வந்த விதமும் இவ்வாறுதான் இருந்தது. இவ்வாறு கொச்சைப் படுத்தப்பட்ட ''சோஷலிச எதார்த்தவாதம்'' நமக்குத் தேவைதானா என்பதே என் கேள்வி.

இங்கு இன்னொரு விஷயத்துக்கும் பதில் சொல்லியாக வேண்டும். 'செம்மலர்' கட்டுரையாசிரியர் ''ஸ்டாலின் காலத்தில் மார்க்சிய அடிப்படையற்றுப் பிரயோகிக்கப்பட்ட'' தாக நான் கூறியதில் ''உண்மைக்கு இடமில்லாமல் போனது துரதிருஷ்டம்தான்'' என்று எனக்காகப் பரிதாபப்பட்டிருக்கிறார். ஆனால் ஸ்டாலின் இறந்து மறு ஆண்டிலேயே-ஸ்டாலினின் தனிநபர் வழிபாட்டுப் போக்கை அம்பலப்படுத்திய 20ஆவது சோவியத் கட்சிக் காங்கிரசுக்கும் முன்பே-1954ல் இரண்டாவது சோவியத் எழுத்தாளர் காங்கிரஸ் கூடியது, (நினைவிருக்கட்டும்: 1936ஆம் ஆண்டு நடந்த முதல் சோவியத் எழுத்தாளர் காங்கிரசில், அடுத்த மூன்று ஆண்டுகளில் இரண்டாவது காங்கிரசைக் கூட்டவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், ஜாடனோவும் (இவர் இறந்தது 1948), ஸ்டாலினும் (இவர் இறந்தது 1953) உயிரோடிருந்த காலத்தில் இரண்டாவது காங்கிரஸ் கூடவேயில்லை. அதாவது எல்லா எழுத்தாளர்களும் கூடிப் பேசுவதற்கான சந்தர்ப்பமோ, ஸ்டாலினிச - ஜாடேனாவிச சோஷலிச எதார்த்தவாதம் பற்றி விவாதிக்கும் வாய்ப்போ கிட்டவில்லை. ஸ்டாலின் மறைவுக்குப் பின்னர்தான் இந்தச் சந்தர்ப்பமும் வாய்ப்பும் கிட்டின). இந்த இரண்டாவது காங்கிரசில் சோவியத் எழுத்தாளர்கள் மேலே குறிப்பிட்ட ''முரண்பாடுகளற்ற சமுதாயம்'' என்ற கோட்பாட்டையும், ''பாசிட்


படிப்பகம்

www.padippakam.com

டில் ஹீரோ'' பற்றிய கோட்பாட்டையும் விமர்சித்து, இவை எவ்வாறு தவறான போக்குகளுக்கு வழி வகுத்தன என்பதை விவாதித்தனர் என்பதும், இதனைக் குறித்து நான் அப்போதே விஜயபாஸ்கரன் நடத்தி வந்த 'சரஸ்வதி'ப் பத்திரிகையில் விரிவாக எழுதியிருந்தேன் என்பதும் 'செம்மலர்' கட்டுரையாசிரியர் சங்கரலிங்கத்துக்குத் தெரியுமா? அப்போது அவர் எங்கிருந்தாரோ, நானறியேன். என்றாலும், 1954ஆம் ஆண்டிலேயே விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்ட இந்தவிஷயத்தை அவர் அறியாமற்போனது அவரது துரதிருஷ்டமேயாகும்.

அது மட்டுமல்ல. 1954ஆம் ஆண்டில் இவ்வாறு ''முரண்பாடற்ற சமுதாயம்'' என்ற தவறான கொள்கை விமர்சிக்கப்பட்டுக் கைவிடப்பட்ட பின்னர் தான் பிரபல சோவியத் எழுத்தாளரான இலியா இரென்பர்க் ''தா'' என்ற நாவலை எழுதினார் (இந்த நாவலையும் வசந்தமே வருக!' என்ற தலைப்பில் தமிழில் நான் மொழி பெயர்த்திருக்கிறேன்) அவர் சோவியத் சமுதாயத்தில் எத்தகைய முரண்பாடுகள் நிலவுகின்றன என்பதை விளக்கும் விதமாகவே இந்த நாவலை எழுதியிருந்தார். (ஆனால் குருஷ்சேவ் காலத்தில் சிறிது காலம் சுதந்திரக் காற்றை அனுபவித்த சோவியத் எழுத்தாளர்கள் வெகு விரைவிலேயே அந்தச் சுதந்திரத்தை இழந்து விட்டனர் மீண்டும் 'பழைய குருடி, கதவைத் திறடி' என்ற கதையில், சோவியத் நாட்டில் கட்சி அதிகாரவர்க்கத்தின் மேலாதிக்கம் இலக்கியத்துறையில் கோலோச்சத் தொடங்கியது என்பதும், தாம் எழுதிய ''தா'' என்ற நாவலுக்காக இலியா இரென்பர்க் 'வருத்தம்' தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்பதும், ஸ்டாலின் ஆட்சிக் காலத்தைப் போலவே குருஷ்சேவ் மற்றும் பிரெஷ்னேவ் ஆட்சிகாலம்வரையிலும் ''மாற்றுக் கருத்தாளர்கள்'' [டிஸ்ஸிடென்ஸ்] என்று கூறப்பட்ட எழுத்தாளர்கள் உழைப்பு முகாம்களுக்கும், மனநோய் இல்லங்களுக்கும், சிறைகளுக்கும், நாடு கடத்தலுக்கும் உள்ளாயினர், என்றாலும், ஸ்டாலின் காலத்தில் நிகழ்ந்ததைப்போல் அவர்கள் கொலையுண்ணவில்லை என்பதும் வேறு விஷயமாகும்.)

இங்கு ''செம்மலர்'' கட்டுரையாசிரின் கவனத்துக்காக, ஸ்டாலின் காலத்தில் வெளிவந்த, ஸ்டாலின் பரிசுகளைப் பெற்ற நூல்களையும் அவற்றை எழுதிய எழுத்தாளர்களைப் பற்றியும் சோவியத் நாட்டின்



படிப்பகம்

www.padippakam.com

மிகப்பெரும் எழுத்தாளராக விளங்கிய ஷோலகோவ். மேற் கூறிய 1954 ஆம் ஆண்டின் எழுத்தாளர் காங்கிரசில் கூறியதை மேற்கோள் காட்டுகிறேன்.

''நமது புத்தகங்களின் தரம் வீழ்ந்து போயுள்ளதற்கு, மற்றுமொரு காரணம் இலக்கியத்துக்குப் பரிசுகள் வழங்கும் முறையாகும்... இந்த முறையின் சீர்- இது தொடர்ந்து நீடித்து வருமானால் - நாமே விரைவில் தங்கத்துக்கும் பித்தளைக்கும் வித்தியாசம் கண்டு கூற இயலாதவர்களாகி விடுவோம். மேலும் முற்றிலும் குழம்பிப் போயுள்ள வாசகர் பரிசு பெற்ற எழுத்தாளர்களின் புத்தகங்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் . கொள்ளவே முனைந்து விடுவார்.''

(ஸ்டாலின் உயிரோடிருந்த காலத்தில், ஸ்டாலின் இலக்கியப் பரிசுக்குரிய நூல்கள் யாவும் ஸ்டாலினின் பங்கெடுப்போடு தான் தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். இவை எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதையும் சிமனோவ் தமது கடைசி நூலில் கூறியுள்ளார். அவற்றை இங்குக் கூற நான் முனையவில்லை).

ஜாடனோவுக்குப் பின் கட்சியின் சார்பில் இலக்கியத் துறைக்குப் பொறுப்பு வகித்து வந்த சுர்க்கோவ் 20ஆவது கட்சிக் காங்கிரசில் உரையாற்றிய பின் (1956) உரையாற்றிய ஷோலகோவ் சோவியத் இலக்கியத்தையும் எழுத்தாளர்களையும் பற்றிய தமது மதிப்பீட்டை இவ்வாறு கூறினார் :

''கடந்த இருபது ஆண்டுகளில் வெளியிடப்பட்ட நல்ல, விவேகம் மிக்க புத்தகங்களை நாம் விரல் விட்டு எண்ணி விட முடியும். ஆனால் மட்டமான புத்தகங்களோ எண்ணில் அடங்காதவை என்றுதான் அவர் (சுர்க்கோவ்) கூறியிருக்க வேண்டும். ஆயிரம் எழுத்தாளர்களின் பேனாக்கள் இருபது ஆண்டுகளில் சில பத்து நல்ல புத்தகங்களை உருவாக்கின. இது ஒன்றும் மிகவும் நல்ல சாதனையல்ல என்று நீங்கள் (சுர்க்கோவ்) நினைக்கவில்லையா?...

**(அடுத்த இதழில் முடியும்)**



படிப்பகம்